
# சுடர் ஒளி
THE SUDAR OLI

21.12.2020 திங்கட்கிழமை

## பிரதேச சபை தலைவருக்கு கொரோனா

வி.ஐ.பிக்கள் பலருக்கும் வந்தது சிக்கல்

கொழும்பு, டிசெ. 21
நுவரெலியா மாவட்டத்தி லுள்ள அக்கரபத்தனை பிரதேச சபையின் தலைவர் கதிர்செல்வனுக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதிப்படுத் 2

மீண்டும் இலங்கை அரசுக்கு

# காலக்கெடு வழங்கவே முயல்கிறார் சுமந்திரன்



விக்னேஸ்வரன் சாட்டை

கொழும்பு, டிசெம்பர் 21
எல்லோரையும் எல்லாக் காலத்திலும் முட்டாள்கள் ஆக்கமுடியாது. 2021 மார்ச் மாதத்தில் மற்றுமொரு காலக் கெடுவை அரசுக்குப் பெற்றுக்கொடுக்கவே சுமந்திரன் முயல்கின்றார். இதில் எந்த மயக்கமும் இல்லை இவ்வாறு தெரிவித் தார் வடமாகாணத்தின் முன்னாள் முதல் வரும் நாடாளுமன்ற உறுப்பினருமான நீதியரசர் க.வி.விக்னேஸ்வரன். 2

பெரமுனவுடன் அதிருப்தி நிலை

## சுதந்திரக் கட்சியினருக்கு சஜித் தரப்பால் அழைப்பு!

கொழும்பு, டிசெ. 21
சுதந்திரக்கட்சிக்கு தேவை யேற்படின் தமது அணியுடன் இணைந்து பயணிக்கலாம் என்று ஐக்கிய மக்கள் சக்தி அழைப்பு விடுத்துள்ளது. எதிர்க்கட்சித் தலைவர் அலு வலகத்தில் இன்று நடை பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போது, 'பொது ஜன பெரமுனவின் செயற்பா டுகள் தொடர்பில் சுதந்தி ரக்கட்சி அதிருப்தியில் இருக் கின்றது. எனவே, அக்கட்சி உறுப்பினர்களையும் அரவ ணைத்துக்கொண்டு பயணிக்கும் எண்ணம் உள்ளதா' என எழுப் 2

## கோத்தாபயவுக்கு எதிராக கூட்டணி!

பரந்துபட்ட அளவில் முன்னெடுப்பு என மஹிந்தானந்த கேலிப் பேச்சு



கொழும்பு, டிசெ. 21
எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவுடன் எதிர்த்தரப்பினர் அனைவ ரும் இணைந்து ஜனாதி பதி கோத்தாபய ராஜபக்ச வுக்கு எதிராகப் பரந்து பட்ட கூட்டணியை அமைத்துக்கொண்டி 2

## ஜன. 11ஆம் திகதி பாடசாலை ஆரம்பம்

தனிமைப்படுத்தப்பட்ட பகுதிகளில் விலக்கு

கொழும்பு, டிசெ. 21
2021ஆம் ஆண்டு கற்றல் நடவடிக்கைக் காக பாடசாலைகள் ஜனவரி மாதம் 11ஆம் திகதி ஆரம்பிக்கப்படும் என்று கல்வி அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் தெரி வித்தார். கொரோனாப் பெருந்தொற் றுக் காரணமாக பாடசாலைகள் எப்போது ஆரம்பமாகும் என் 2

சுகாதார நடைமுறைகள் இன்மையால்

## பருத்தித்துறையில் இரண்டு வர்த்தக நிலையங்கள் சீல்

கொழும்பு, டிசெ. 21
சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றாமல் தனி மைப்படுத்தல் சட்டத்தை மீறியதற்காக இரண்டு வர்த்தக நிலையங்கள் பருத்தித்துறை நகர பொதுச் சுகாதாரப் பரிசோதகரால் சீல் வைத்து மூடப்பட்டன.
மாவட்டம் விட்டு மாவட்டம் சென்றுவந்த குறித்த வர்த்தக நிலையங்களின் உரிமையா 2

## எல்லைக்கற்கள் போடப்படுவதை நிறுத்தவேண்டும்

வனவளத் திணைக்களத்துக்கு ஆளுநர் இவ்வாறு உத்தரவு

முல்லைத்தீவு, டிசெ. 21
முல்லைத்தீவு மாவட்டத் தில் வனவளத்திணைக்களம் எல்லைக்கற்கள் இடும் 2

## எதிர்வரும் 30ஆம் திகதி மாநகர முதல்வர் தெரிவு

யாழ்ப்பாணம், டிசெ. 21
2021ஆம் ஆண்டுக்கான பாதீடு தோற்கடிக்கப் பட்டதன் விளைவாக வறிதாக்கப்பட்டுள்ள யாழ்ப்பாணம் மாநகர சபையின் முதல்வர் பதவிக்கான தெரிவு எதிர்வரும் 30ஆம் திகதி புதன்கிழமை இடம்பெறவுள்ளது. இதற்கான அறிவித்தலை வடக்கு 2



## 43ஆம் அரசியல் படையணி: உருவாக்குகின்றார் சம்பிக்க!

கொழும்பு, டிசெ. 21
ஜாதிக ஹெல உறுமயவிலிருந்து வெளியேறியுள்ள சம்பிக்க ரணவக்க உள்ளிட்ட குழுவினர் புதிய தொரு அரசியல் இயக்கத்தை 2

சுட்டெரிக்கும் உண்மைகளை சுமந்து வரும் மாலை இதழ்

## கோத்தாபயவுக்கு...

ருக்கின்றனர். இந்தக் கூட்டணியின் தலைமைத்து வத்துக்காக முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க உள்ளிட்ட பலர் தயாராகிக் கொண்டிருக்கிறார்கள் என்று கமத் தொழில் அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே தெரிவித்தார்.

மக்கள் சந்திப்பொன்றில் நேற்று உரையாற்றுகையி லேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

தற்போது எதிர்த் தரப்பினர் பரந்துபட்ட கூட்ட ணியொன்றை அமைக்கவுள்ளனர் எனக் கூறிக் கொண்டிருக்கின்றனர். கோத்தாபய ராஜபக்சவுக்கு எதிரானதாக அந்தக் கூட்டணி அமையும் என்றும் கூறுகிறார்கள். சம்பிக்க ரணவக்க, அநுரகுமார திஸாநாயக்க, சுமந்திரன், ரிஷாட் பதியுதீன், ரவுப் ஹக்கீம் உள்ளிட்டோரே இந்த கூட்டணியின் அங்கத்தவர்களாவர்.

கடந்த ஐந்தாண்டு காலமாக நாட்டில் பல்வேறு ஊழல் மோசடிகளில் ஒன்றாக ஈடுபட்டவர்களே தற்போதும் ஒன்றிணைந்துள்ளார்கள். இவர்கள் அடிப்படைவாதத்தையும் பங்கரவாதத்தையும் தூண்டியவர்களாவர். இவர்களே சஜித் பிரேமதாசவுடன் கூட்டணி அமைக்கப் போகிறார் கள்.

இவ்வாறானதொரு கூட்டணி உருவாக்கப்படுவது எமக்கும் மகிழ்ச்சியளிக்கிறது. சம்பிக்க ரணவக்க, சஜித் பிரேமதாச, மங்கள சமரவீர, சந்திரிகா குமாரதுங்க உள்ளிட்டோர் இந்த கூட்டணியின் தலைமைத்துவத்திற்காக காத்துக்கொண்டிருக்கின் றனர் என்றார். (ம-22)

## பருத்தித்துறையில்...

ளர்கள் சுகாதார மருத்துவ அதிகாரிக்கு எவ்வித அறிவுறுத்தலும் வழங்காமல் வர்த் தக நிலையங்களைத் திறந்ததை அடுத்தே மேற்படி வர்த்தக நிலையங்கள் சீலி டப்பட் டன. (ம-26)

## ஜன. 11ஆம் திகதி..

பது தொடர்பில் பெரும் சந்தேகம் இருந்த நிலையில் கல்வி அமைச்சர் இவ்வாறு அறிவித்துள்ளார். மேல் மாகாணத்திலும் ஏனைய தனிமைப்படுத்தப்பட்ட பகுதிக ளும் விதிவிலக்கு என்றும் அறிவிக்கப்பட் டுள்ளது. இவை தொடர்பில் அடுத்த தீர்மா னங்கள் விரைவில் வரும் என்றும் எதிர்பார்க் கப்படுகின்றது. (ம-இ)

# காலக்கெடு...

இது தொடர்பில் அவர் அனுப்பியுள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட் டுள்ளதாவது:

சுமந்திரன் சிலரை எல்லாக் காலத்திலும் முட்டாள் கள் ஆக்கலாம். பலரை சிலகாலம் முட்டாள்கள் ஆக்கலாம். ஆனால் எல்லோரையும் எல்லாக் காலத்திலும் முட்டாள்கள் ஆக்கமுடியாது. அதுவும் அவருக்குச் சட்டம் படிப்பித்த ஆசிரி யரை முட்டாளாக்க பார்ப்பது குருத்துரோகம் ஆகும்.

நானும் கஜேந்திரகுமாரும் பொய் சொன்னதாகக் கூறியுள்ளார். அவர் கூறுவது சரியா அல்லது கஜேந்திரகுமாரும் நானும் கூறுவது சரியா என் பதை அவரால் எம்மிடம் கையளிக்கப்பட்ட கடித வரைவை மொழிபெயர்த்தால் தெரிந்துவிடும். அவர் அனுமதி அளித்தால் குறித்த கடிதத்தை மொழிபெயர்த்துக் கொடுக்கமுடியும்.

அதில் தமது சிபார்சுகள் என்று கூறிமுதலில் அவர் அங்கு கூறியிருப்பது இலங்கை உட்பட ஒரு தடவை அல்ல மூன்று தடவைகள் ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையின் அங்கத்தவர்கள் யாவரினதும் சம்மதத்துடன் இயற்றியது போன்ற ஒரு கூட்டத் தீர்மானத்தை 2021ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் இயற்ற வேண்டும் என்பதே. அதாவது முன்னர் மூன்று முறை காலக்கெடு அளித்ததுபோல் மேலும் ஒருமுறை காலக்கெடு அளிக்க வேண்டும் என்பதே அதன் அர்த்தம். இதில் எந்த மயக்கமும் இல்லை.

ஆனால் எம்மிடம் இருந்து பதில் வரமுன்னரே குறித்த கடிதம் ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவைக்கும் ஏனையோருக்கும் அனுப்பப்பட் டுள்ளது என அறிகின்றேன். எம்மிடம் எமது கருத்துக்களைக் கோரிவிட்டு அதற்கு முன்னர் குறித்தகடிதம் அனுப்பப்பட்டிருந்தால் அது வருத்தத்திற்குரியது. ஆனால் இப்பொழுதும் அனைவரின் சம்மதத்துடன் புதியதொரு வரைவை அனுப்பலாம். அடுத்து நாங்கள் என்னசெய்ய வேண்டும் என்று கேட்கின்றீர்கள். பொதுவாக இரண்டு விடயங்களைப் பலர் அடையாளம் கண்டுள்ளார்கள்.

ஒன்று ஐ.சீ.சி என்னும் சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்துக்கு இலங்கையைப் பாரப்படுத்த நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் அல்லது இலங்கைக்கென நியமிக்கப்படும் சர்வதேச குற்றவியல் தீர்ப்பாயம் ஒன்றின் முன் இலங் கையை நிறுத்த நடவடிக்கை எடுக்கவேண்டும். அதனை சம்பந்தப்பட்ட ஒரு அங்கத்துவ நாட்டின் ஊடாகச் செய்ய வேண்டும். அடுத்தது சர்வதேச சுதந்திர விசாரணைப் பொறிமுறையொன்றை நிறுவி அதைக் கொண்டு இலங்கையில் நடந்த மிக ஆபத்தான சர்வதேசக் குற்றங்களையும் சர்வதேசச் சட்ட மீறல்களையும் பற்றிய சாட்சியங்களைச் சேகரித்து அவற்றை ஒன்றுபடுத்தி, பாதுகாத்து அவற்றை ஆய்வுசெய்யவும் அவைதொடர்பாகஉரி யகோவைகளைத் தயாரித்துசர்வதேசச் சட்டமு றைமைக்கேற்றவாறு நியமிக்கப்படும் நீதிமன்றங்களில் அல்லது தீர்ப்பாயங்களில் நடைபெறும் குற்றவியல் நடவடிக்கைகளில் அக்கோவைகளைச் சமர்ப்பித்து நீதியும் சுதந்திரமானதுமான விசாரணைகளை விரைவாக நடத்த அனுசரணை வழங்கும் விதத்தில் நடவடிக் கைகள் எடுக்கவேண்டும்.

மேலும் சமாந்திரமாக சர்வதேச நீதிமன்றத்துக்கு இலங்கையைக் கொண்டுபோவது பற்றியும் பரிசீலிக்கப்படவேண்டும். அதற்கு சகல தமிழ்த் தரப்பாரும் ஆதரவு வழங்க முன்வர வேண்டும். எமது ஒற்றுமையே இந்தத் தருணத்தில் எமக்குப் பலமாகும் என்றுள்ளது. (ம)

## சுதந்திரக்...

பட்ட கேள்விக்கு பதிலளிக்கையிலேயே எரான் விக்கிரமரத்ன எம்.பி. இவ்வாறு அழைப்பு விடுத்தார். இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு,

'ஐக்கிய மக்கள் சக்தி என்பது எமது கட்சி. ஐக்கிய மக்கள் முன்னணி என்பது எமது கூட்டணி. எனவே, எமது கட்சியின் கொள்கையுடன் ஒத்துப்போகக்கூடிய எந்த கட்சியும், அமைப்புகளும், நபர்களும் இணைந்து பயணிக்கலாம். கதவுகள் திறந்தே உள்ளன. ஐக்கிய தேசியக்கட்சி மீதான அதிருப்தியால் அக்கட்சியில் இருந்து வெளியேறியவர்களுக் கும் அழைப்பு விடுக்கின்றோம். ஐக்கிய தேசியக்கட்சிகூட வரலாம். ஆனால் எமது கொள்கைகள் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும்.' என்றார். அதேவேளை ஐக்கிய மக்கள் சக்தியின் சம்மேளனத்தில் ஏன் பங்காளிக்கட்சி தலைவர்கள் பங்கேற்க வில்லை என எழுப்பப்பட்ட கேள்விக்கு, 'பங்காளிக்கட்சிகளின் தலைவர்களுக்கு அழைப்பு விடுத்திருந்தோம். எனினும், கூட்டம் பதுளையில் நடைபெற்றதால் அவர்களால் பங்கேற் கமுடியாத சூழ்நிலை ஏற்பட்டது. மற்றும்படி எவ்வித பிரச்சி னையும் இல்லை' என்றார். (ம-44)

## பிரதேச சபை...

தப்பட்டுள்ளது.

இவரின் வதிவிடம் அமைந் துள்ள தோட்டப்பகுதியில் கொரோனா வைரஸ் தாக்கம் அதிகரித்ததால் தவிசாளர் உட்பட அவரின் குடும்ப உறுப்பினர்கள் சுயதனிமைக்கு உட்படுத்தப் பட்டனர். அத்துடன் பி.சி. ஆர் பரிசோதனைக்கான மாதிரிகளும் சுகாதார பிரிவினரால் பெறப்பட்டி ருந்தன.

பி.சி.ஆர் பரிசோதனைக் கான மாதிரி பெறப்பட்டால் முடிவு வெளியாகும்வரை சுயதனிமையில் இருக்க வேண்டும். ஆனால் குறித்த பிரதேச சபை தலைவர் நுவ ரெலியாவில் நடைபெற்ற பல அரச நிகழ்வுகளில் பங்குபற்றியுள்ளார்.

இந்த நிகழ்வுகளில் அமைச் சர், இராஜாங்க அமைச்சர் மற்றும் பிரதேச அரசியல் வாதிகளும் பங்குபற்றியிருந் தனர். வீ.ஐ.பிக்கள் அமர்ந்தி ருந்த முன்வரிசையிலேயே இவருக்கு கதிரை ஒதுக்கப் பட்டிருந்தது. இதனால் அவர்களுக்கும் வைரஸ் தொற்றியிருக்கலாம் என அச்சம் வெளியிடப்பட் டுள்ளது.

தனிமைப்படுத்தல் சட் டத்தைமீறி, சமூகத்துக்கு தவறான முன்னுதாரணத்தை வழங்கிய இவரின் செய லுக்கு சுகாதார அதிகாரிகள் கண்டனத்தை வெளியிட் டுள்ளனர். அத்துடன் இன்று இரண்டாவது தடவையும் பிசிஆர் பரிசோதனைக்கான மாதிரிகள் அவரிடமிருந்து பெறப்பட்டுள்ளன. (ம-44)

## 43ஆம் அரசியல்...

கட்டியெழுப்பும் நடவடிக்கையில் இறங்கியுள்ளனர் என தெரியவரு கின்றது.

குறித்த இயக்கத்துக்கு '43ஆம் பிரிவு' என பெயரிடப்படவுள்ளது எனவும், 'இது இலக்கமல்ல தலைமுறை' என்ற மகுடத்தின் கீழ் அந்த இயக்கத்தின் அரசியல் பயணம் ஆரம்பமாகும் என வும் அறியமுடிகின்றது. கடந்த பொதுத் தேர்தலின் பிறகு செயற்பாட்டு அரசியலில் இருந்து ஒதுங்கியிருந்த அர சியல்வாதிகள் மற்றும் அமைப்புகளின் பிரதிநிதிகளை இந்த இயக்கத்தில் இணைத்துக்கொள்வதற்கான நடவடிக் கையும் முன்னெடுக்கப் பட்டுள்ளது.

1943ஆம் ஆண்டில்தான் இலங்கையில் இலவசக்கல்விக்கான சட்டமூலம் இயற்றப்பட்டது. தரம் ஒன்று முதல் பல்கலைக்கழக கல்விவரை இலவசக் கல்வி வழங்கப்பட்டது. இதுவே இலங்கையில் சமூக வளர்ச்சிக்கு வித்திட்டது. எனவேதான் '43' என்ற பெயர் சூட்டப்படவுள்ளது எனவும் கூறப்படுகின்றது. ஐக்கிய மக்கள் சக்தி யை பலப்படுத்தும் ஒரு பங்காளியாக குறித்த இயக்கம் செயற்படக்கூடும் என எதிர்பார்க்கப்படுகின்றது. (ம-44)

## எதிர்வரும்...

மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் ம.பற்றிக் டிறஞ்சன் விடுத்துள்ளார். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆளுகைக்குட்பட்டிருந்த யாழ்ப்பா ணம் மாநகர சபையின் 2021ஆம் ஆண்டுக்கான பாதீடு கடந்த 16ஆம் திகதி மாநகர முதல்வர் இம்மனுவல் ஆனோல்டால் சமர்ப்பிக்கப்பட்டிருந் தது. பாதீட்டுக்கு ஆதரவாக 21 வாக்குகளும், எதிராக 24 வாக்குகளும் அளிக்கப்பட்டன. 3 வாக்குகளால் பாதீடு தோற்கடிக்கப்பட்டதால் சட்ட ஏற்பாடுகளுக்கமைய முதல்வரின் பதவி வறிதாக்கப்பட்டது.

அந்த இடத்துக்கு மீண்டும் முதல்வர் ஒருவரைத் தெரிவு செய்யும் வகையில் 2012ஆம் ஆண்டு 22ஆம் இலக்க உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் திருத்தச் சட்டத்தின் 66ஏ பிரிவின் கீழ், மாகாண உள்ளூராட்சி ஆணையாள ருக்கு அளிக்கப்பட்டுள்ள தத்துவத்தின் அடிப்படையில் யாழ். மாநகர சபைக்கு புதிய முதல்வர் ஒருவரைத் தேர்ந்தெ டுப்பதற்கான கூட்டம் எதிர்வரும் 30ஆம் திகதி புதன்கிழமை இடம்பெற வுள்ளது. (ம-20)

## எல்லைக்கற்கள்...

நடவடிக்கையை நிறுத்த வேண்டும் என்று தெரிவித்தார் வடக்கு மாகாண ஆளுநர்.

முல்லைத்தீவு மாவட்ட அபிவிருத் திக் குழுக்கூட்டத்திலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

இறுதியாக வந்த அமைச்சரவைத் தீர்மானத்தின்படி 2001ஆம் ஆண் டுக்கு முதல் பிரதேச செயலாளர் களின் பொறுப்பில் இருந்த அனைத் துக் காடுகளும் மீண்டும் அவர்களுக் குக் கையளிக்கபடவேண்டும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. இதனை நடைமுறைப்படுத்த வேண்டும் என சகல மாகாண காணி ஆணையாளர் களுக்கும் அறிவுறுத்தல் வழங்கப்பட் டுள்ளன. இதனை உடனடியாக நடைமுறைப்படுத்த வேண்டும். இந்த நடவடிக்கை முடிவுறுத்தப்ப டும் வரை வனவளத்திணைக்களம் எல்லையிடும் நடவடிக்கையை நிறுத்த வேண்டும் என்றார். (ம-19)

# தடுப்பூசி பாவனையால் மாத்திரம் கொரோனாவைத் தடுக்கமுடியாது

## விதிமுறைகளையும் பின்பற்ற வேண்டும் என்கிறது உலக சுகாதார அமைப்பு

கொழும்பு, டிசெ.21

கொவிட் தொற்றுநோயைத் தவிர்க்க சுகாதார நெறிமுறைகளை தடுப்பூசியுடன் நீண்ட காலம் பின்பற்ற வேண்டும் என்று உலக சுகாதார அமைப்பு தெரிவித்துள்ளது.

மேலும், உலகம் முழுவதும் கொவிட் தொற்றுநோயால் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ள நிலையில், அனைத்து மக்களும் கொரோனா தடுப்பூசிக்காக காத்திருக்கின்றனர். ரஷ்யா, பிரிட்டன் மற்றும் அமெரிக்காவிலும் தடுப்பூசி பணிகள் தொடங்கப்பட்டுள்ளன. இந்நிலையில், இந்த தடுப்பூசி கொரோனா தொற்றுநோய்க்கு எதிரான பிரம்மஸ்திரம் அல்ல. தடுப்பூசியுடன் சுகாதார நடைமுறைகளை நீண்ட காலம் பின்பற்ற வேண்டும் எனத் தெரி வித்துள்ளது. அத்துடன், கடந்த ஒரு வருடமாக இரவும் பகலும் உழைத்து வரும் சுகாதார ஊழியர்களைப் பற்றி சிந்திப்பதுடன், கொவிட் சுகாதார நெறிமுறையான தனிநபர் இடைவெளி, அடிக்கடி கை கழுவுதல், முகமூடி அணிவது, நெரிசலான இடங்களுக்கு செல்வதைத் தவிர்ப்பது போன்றவற்றை கடைப்பிடியுங்கள் எனவும் உலக சுகாதார அமைப்பு கோரிக்கைவிடுத்துள்ளது.

இது தொடர்பாக உலக சுகாதார அமைப்பின் பிராந்திய இயக்குநர் தகேஷி கசாய் தெரிவிக்கையில், எந்த நிலையிலும் கொரோனா வைரஸ் உங்களைச் சுற்றி எப்படியாவது வருகிறது.

நாம் அனைவரும் ஆபத்தில் இருக்கிறோம். எந்தவொரு ஆபத்தான சூழ்நிலையையும் எதிர்கொள்ள நாம் எப்போதும் தயாராக இருக்க வேண்டும். தொற்றுநோய் குறித்த கவலைகள் மற்றும் நிச்சயமற்ற நிலைகள் இருந்தபோதிலும், தங்களுக்கும் தங்களைச் சுற்றியுள்ளவர்களுக்கும் தொற்றுநோயைத் தடுக்க தங்களால் முடிந்த அனைத்தையும் இளைஞர்கள் சமூக அக்கறையுடன் மேற்கொள்ள வேண்டும் எனத் தெரிவித்துள்ளார். (ந-இ)





## காணிகளை மீட்டுத்தருமாறு திருமலையில் கவனவீர்ப்பு

திருகோணமலை, டிசெ.21

நிலாவெளி 8 ஆம் கட்டையை சேர்ந்த ரசூல் தோட்டத்தின் சுமார் 61 ஏக்கர் நிலப்பரப்பு இதுவரை காலம் மக்கள் பாவனைக்குட்பட்டிருந்த நிலையில் தற்போது சுற்றுலாத்துறைக்குரிய பிரதேசமாக அறிவிக்கப்பட்டுள்ளது. இதனால் அங்கு வாழ்ந்த மக்கள் நிர்க்கதியான நிலைமைக்கு தள்ளப்பட்டுள்ள நிலையில் இன்று நிலாவெளி பிரதான வீதியில் அமைதியான முறையில் காணியை மீட்டுத்தருமாறு கோரி கவனவீர்ப்பில் ஈடுபட்டார்கள்.

இதுவரை காலம் வாழ்ந்து வந்த மக்களுக்கு எந்தவித மாற்று வசதிகளோ நட்டஈடோ வழங்கப்படாத நிலையில், எந்த அரசியல் வாதிகளோ சம்பந்தப்பட்ட அதிகாரிகளோ உரிய தகுந்த முடிவுகள் எடுக்கவில்லை எனவும் கூறப்படுகிறது. இது தொடர்பில் பதாகைகளை ஏந்தியவாறு மக்கள் போராட்டத்தை முன்னெடுத்தனர்.

குறித்த நிலப்பரப்பு 2015 இல் அரசுடைமையாக்கப்பட்டு சுற்றுலாத்துறைக்கு கையகப்படுத்தப்பட்டுள்ளது. பரம்பரை பரம்பரையாக பூர்வீகக் காணிகளை அரசுடைமையாக்கம் செய்வது தங்களுக்கு கவலையளிக்கின்றது என கவனவீர்ப்பில் ஈடுபட்ட மக்கள் மேலும் தெரிவித்தனர். (ந)

## தமிழகத்துக்குள் நுழைந்த இலங்கையர் கைது

கொழும்பு, டிசெ.21

சட்டவிரோதமாக கடல் வழியாக தமிழகத்துக்குள் நுழைந்த இலங்கையர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

நாட்டில் நடைபெற்ற இறுதிக் கட்ட போரின்போது தமிழகத்துக்கு அகதியாகச் சென்று மண்டபம் அகதிகள் முகாமில் தங்கி இருந்த முஜிபூர் ரகுமான் என்பவர், கடந்த 2019 டிசெம்பர் மாதம் 25ஆம் திகதி சட்டவிரோதமாக இலங்கைக்கு திரும்பியுள்ளார். இந் நபர் மீண்டும் நேற்றிரவு மன்னார் பேசாலையிலிருந்து சட்டவிரோதமாக தமிழகத்தின் தனுஷ்கோடிக்கு சென்றுள்ளார்.

இவரைக் கைதுசெய்த இந்திய உளவுத்துறை அதிகாரிகள், அவரை மண்டபம் முகாமில் வைத்து விசாரணை நடத்தி வருகின்றனர் என இந்திய ஊடகங்கள் தெரிவித்துள்ளன. (ந-இ)

## தொலைவில் மருத்துவமனை பறிபோனது சிறுமியின் உயிர்

மட்டக்களப்பு, டிசெ.21

விஷப் பாம்பு கடிக்குள்ளான 4 வயது சிறுமி ஒருவர் 20 கிலோ மீற்றர் தொலை தூரத்தில் உள்ள மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக கொண்டு செல்லும் வழியில் உயிரிழந்துள்ளார்.

மட்டக்களப்பு கட்டுமுறிவு குளம் பகுதியில் நேற்று அதிகாலை இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. அடிப்படை வசதிகள் அற்ற ஒரு குடிசை வீட்டில் அந்தக் குடும்பம் வசித்து வந்துள்ளது.

இந் நிலையில் நேற்று அதிகாலை வேளையில் விஷப்பாம்பு சிறுமியைக் கடித்ததையடுத்து 20 கிலோ மீற்றர் தொலைவில் உள்ள கதிரவெளி மருத்துவமனைக்கு சிறுமியைக் கொண்டு செல்லும் வழியில் அவர் உயிரிழந்துள்ளார் எனத் தெரிய வருகின்றது. கட்டுமுறிவு குளம் கிராமமானது மாவட்டத்தின் எல்லைப் புறத்தில் உள்ளது.

விஷப்பாம்பு, காட்டு யானை தாக்குதல், காட்டு மிருகங்கள் தாக்குதல் எனப் பலவற்றுக்கு அந்தக் கிராம மக்கள் முகம் கொடுத்து வருகின்றனர்.

ஆனாலும் சிகிச்சை பெறுவதற்கு நீண்ட தொலைவில் உள்ள மருத்துவமனைக்கு செல்ல வேண்டியுள்ளது. இதுபோன்றதொரு உயிரிழப்பு மீளவும் அந்தப் பகுதியில் இடம்பெறாமல் இருப்பதற்கு மருத்துவ அதிகாரிகள் கவனம் செலுத்தி நிரந்தர மருத்துவமனையை அமைத்துத்தர வேண்டும் என கிராம மக்கள் கோரிக்கை விடுத்துள்ள னர்.

தொடர் மழையால் கதிரவெளி இருந்து கட்டுமுறிவு செல்லும் பிரதான பாதையானது நீர் நிரம்பி காணப்படுவதனால், பல கிராமங்களுக்குச் செல்லும் போக்குவரத்து தடைப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (வ-இ)



# மத விழுமியங்களைக் கொண்ட சமூகம்தான் எமக்குத் தேவை

## பிரதமர் மஹிந்த தெரிவிப்பு

கொழும்பு, டிசெ. 21

இலங்கைக்கு மதசார்பற்ற சமூகம் அவசியமில்லை மாறாக மதவிழுமியங்களை அடிப்படையாக கொண்டுவாழும் சமூகமே தேவை என பிரதமர் மஹிந்த ராஜபக்ச தெரிவித்தார்.

குருநாகலில் நேற்று இடம்பெற்ற நிகழ்வொன்றில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

மதவிழுமியங்களை வளர்த்தெடுப்பதும் மதங்களுடன் தொடர்புடைய இடங்களை அபிவிருத்தி செய்வதுமே எங்கள் கடமையும் பொறுப்புமாகும்.

அரசாங்கம் என்ற வகையில் நாங்கள் இதற்கு அவசியமான நடவடிக்கைகளை எடுக்க தவற மாட்டோம். மிகவும் நெருக்கடியான தருணத்திலும் கத்தோலிக்க சமூகம் அன்பின் செய்தியை பாதுகாக்கின்றது.

உயிர்த்த ஞாயிறுதாக்குதலின் பின்னர் கத்தோலிக்க சமூகம் நிலைமையை மேலும் சிக்கலானதாக மாற்றாமல் பொறுமையைக் கடைப்பிடித்தது - என்றார்.

# போக்குவரத்து கட்டுப்பாடுகளை உடன் அமுலாக்குக

## ஆபத்தை நோக்கி நாடு என எச்சரிக்கிறார் சுகாதார பரிசோதகர்கள் சங்கத்தின் தலைவர்

கொழும்பு, டிசெ.21

நாட்டில் அபாயப் பகுதிகளாக அடையாளம் காணப்பட்டுள்ள இடங்களிலிருந்து ஏனைய பகுதிகளுக்குச் செல்வோருக்கு கடுமையான போக்குவரத்து கட்டுப்பாடுகளை விதிக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என இலங்கை பொதுச் சுகாதார பரிசோதகர்கள் சங்கத்தின் தலைவர் உபுல் ரோஹண கோரிக்கைவிடுத்துள்ளார்.

மேலும், கிராம பகுதிகளிலிருந்து நகர் பகுதிகளுக்கு செல்கின்ற மக்கள் ஆடை கொள்வனவு உள்ளிட்டவற்றின்போது பாதுகாப்பு விதிமுறைகளைப் பின்பற்றாமல் செயற்படுவதை அவதானிக்க முடிகிறது. எனவே அபாயமுடைய பகுதிகளிலிருந்து பயணிக்கும் நபர்களுக்கு கடுமையான போக்குவரத்து கட்டுப்பாடு விதிக்கப்பட வேண்டும்.

அவ்வாறு கட்டுப்பாடுகள் விதிக்கப் படாது விடின் எதிர்வரும் நாள்களில் மிகப்பெரும் பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்க நேரிடும் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (ந-இ)

## பேக்கரி ஊழியர்கள் 23பேருக்கு தொற்று

கொழும்பு, டிசெ.21

இரத்மலானை பகுதியில் அமைந்துள்ள பேக்கரி ஒன்றில் பணியாற்றும் 23 ஊழியர்களுக்கு கொரோனாத் தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது.

இதனையடுத்து, அங்கு பணியாற்றும் சகலரையும் தனிமைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (ச)

## சட்டவிரோத மஞ்சளுடன் மட்டக்குளியில் ஒருவர் கைது

கொழும்பு, டிசெ.21

கொழும்பு, மட்டக்குளி பகுதியில் காய்ந்த மஞ்சளை சட்டவிரோதமான முறையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் சந்தேக நபர் ஒருவர் விசேட அதிரடிப்படையிரால் கைசெய்யப்பட்டுள்ளார்.

கைதுசெய்யப்பட்ட சந்தேக நபரிடம் இருந்து ஆயிரத்து 950 கிலோகிராம் மஞ்சள் கைப்பற்றப்பட்டுள்ளது என தெரிவிக்கப்படுகின்றது. (ச)



## வெள்ளத்தால் பாதித்தோருக்கு உலருணவு பொருள்கள்

சாவகச்சேரி, டிசெ.21

சாவகச்சேரி, கோவில்குடியிருப்புப் பிரிவில் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட 75 குடும்பங்களுக்கு சாவகச்சேரி பிரிவு கிராம அலுவலர் அலுவலகத்தில் வைத்து அத்தியாவசிய உலர் உணவுப் பொதிகள் நேற்று வழங்கப்பட்டன.

தொழிலதிபர் ஒருவரின் நிதிப் பங்களிப்பில் தலா 2 ஆயிரம் ரூபா பெறுமதியான உலர்உணவு பொருள்களே இவ்வாறு வழங்கப்பட்டன. (ச-9)

## ஐஸ் தொழிற்சாலை தீ விபத்து கட்டுக்குள்!

மட்டக்களப்பு, டிசெ.21

மட்டக்களப்பு கல்லடிப் பாலத்துக்கு அருகில் நீண்டகாலமாக கைவிடப்பட்ட நிலையிலுள்ள ஐஸ் உற்பத்தித் தொழிற்சாலையில் நேற்று மாலை தீ விபத்து ஏற்பட்ட நிலையில் அது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டது.

இந்த ஐஸ் தொழிற்சாலை மட்டக்களப்பு மாவட்ட கடற்றொழில் நீரியல்வளத் திணைக்களத்துக்கு அருகில் அமைந்துள்ளது. இது கடந்த 5 வருடத்துக்கு மேலாக கைவிடப்பட்ட நிலையில் உள்ளது.

கடந்த ஆறு மாதங்களுக்கு முன்னரும் இங்கு தீ விபத்து ஏற்பட்டிருந்தது.

நேற்று மழைக்கு மத்தியிலும் இந்த தீ விபத்து ஏற்பட்டுள்ள நிலையில், இந்தத் தீயை மட்டக்களப்பு மாநகரசபையின் தீயணைக்கும் பிரிவினர் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவந்தனர்.

இது குறித்த விசாரணைகளை மட்டக்களப்பு பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.(ற-இ)

## 77 இலங்கையர்கள் தாயகம் திரும்பினர்

கொழும்பு, டிசெ.21

கொரோனா பரவல் காரணமாக வெளிநாடுகளில் சிக்கியுள்ள 77 இலங்கையர்கள் இன்று கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தனர்.

சவூதி அரேபியாவிலிருந்து 52 பேரும் கட்டாரிலிருந்தும் 25 பேரும் தாயகம் திரும்பியுள்ளனர் என கொவிட்19 தடுப்புக்கான தேசிய செயற்பாட்டு மையம் தெரிவித்துள்ளது.

நாட்டை வந்தடைந்த அனைவருக்கும் பி.சி.ஆர். பரி சோதனை மேற்கொள்ளப்பட்டு தனிமைப் படுத்தல் நடவடிக்கைகளுக்காக அனுப்பப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

## மாவட்டங்களுக்கு மண்சரிவு எச்சரிக்கை

கொழும்பு, டிசெ.21

தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள மழையுடனான காலநிலையால் 3 மாவட்டங்களுக்கு மண்சரிவு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய, கண்டி, மாத்தளை, நுவரெலியா ஆகிய மாவட்டங்களுக்கே இந்த மண்சரிவு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

தேசிய கட்டட ஆய்வு மையம் இந்த எச்சரிக்கையை விடுத்துள்ளது என இடர் முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது. (ச)

## திருமலையில் அனைத்து பாடசாலைகளுக்கும் பூட்டு!

திருகோணமலை, டிசெ.21

திருகோணமலை மாவட்டத்தின் நகரை அண்டிய பிரதேசத்தில் 15 கொரோனாத் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று மாவட்ட அரசாங்க அதிபர் சமன் தர்சன பாண்டிகோரள தெரிவித்துள்ளார்.

இதனால் கிழக்கு மாகாண ஆளுநரின் அறிவுறுத்தலுக்கமைய, திருகோணமலைக் கல்விக் கோட்டத்துக்குட்பட்ட அனைத்துப் பாடசாலைகளும் இன்று முதல் மறு அறிவித்தல் வரை மூடத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. அத்துடன், பொதுமக்கள் சுகாதாரத் துறையினர் விடுத்துள்ள அறிவுறுத்தல்களை முற்றாகக் கடைப்பிடித்தல் வேண்டும் என்றும் அரசாங்க அதிபர் மேலும் தெரிவித்துள்ளார். (ற-இ)




## எழுமாறான பரிசோதனைக்கு ஒத்துழைப்பு வழங்குங்கள்

### சுகாதார அமைச்சு கோரிக்கை

கொழும்பு, டிசெ.21

கொரோனாத் தொற்றைக் கட்டுப்படுத்த எழுமாறாக முன்னெடுக்கப்படும் அன்டிஜென் பரிசோதனைகளுக்கு மக்கள் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்று சுகாதார அமைச்சு கேட்டுக் கொண்டுள்ளது.

சோதனை நடவடிக்கைகளைப் புறக்கணிப்பதால், முழுச் சமூகமுமே ஆபத்தை எதிர்நோக்கும் நிலை ஏற்படும் என பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம், விசேட வைத்திய நிபுணர் ஹேமந்த ஹேரத் தெரிவித்துள்ளார். இதேவேளை, மேல் மாகாணத்திலிருந்து வெளியேறும் நபர்களுக்கு அன்டிஜென் பரிசோதனை முன்னெடுக்கப்படுகின்றது. இதில் 6 பேருக்கு தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

## போலி விசாவில் தப்ப முயன்ற பெண் கைது

வவுனியா,டிசெ.21

போலி விசாவைப் பயன்படுத்தி நாட்டை விட்டுத் தப்பிச் செல்ல முயன்ற பெண் ஒருவர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து விமான நிலைய குடிவரவு மற்றும் குடியகல்வு பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார். கட்டார் ஊடாக பிரான்ஸுக்குச் செல்ல முயன்ற வவுனியா பிரதேசத்தைச் சேர்ந்த 21 வயதான யுவதியே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. குறித்த யுவதி மேலதிக விசாரணைகளுக்காக விமான நிலைய குற்றப் புலனாய்வு பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-110)

சுடர் ஒளி
மாலைப்பதிப்பு
திங்கட்கிழமை 21.12.2020



# வெற்றிலைத் துப்பலால் ஒரு குடும்பமே தனிமையில்!

கொழும்பு, டிசெ.21

கொரோனாத் தொற்றுக்குள்ளான பெண் ஒருவர் வெற்றிலை எச்சிலைத் துப்பிய நிலையில், எச்சில் விழுந்த இருவர் உட்பட அவர்களது குடும்ப அங்கத்தவர்களும் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

கொழும்பிலிருந்து கொரோனாத் தொற்றாளர்கள் சிலர் அண்மையில் விசேட பஸ் மூலம் பலங்கொடை சமனலவெவ பகுதியிலுள்ள தனிமைப்படுத்தல் முகாமுக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.இதன்போது பலாங்கொடை கல்தொட்டை, மிரிஸ்வத்த பகுதியில் வைத்து அந்த பஸ்ஸின் ஜன்னலைத் திறந்த கொரோனாத் தொற்றுடைய பெண் வாயிலிருந்த வெற்றிலை எச்சிலை வெளியே துப்பியுள்ளார்.

பஸ் அருகே பயணித்த மோட்டார் சைக்கிளில் இருந்த இருவர் மீது இந்த வெற்றிலை எச்சில் விழுந்ததை அடுத்து பொதுச் சுகாதார அதிகாரிகளின் ஆலோசனைக்கு இணங்க அவர்களும் அவர்களது குடும்ப உறுப்பினர்களும் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (ந-இ)





## மண்வாசனை அமைப்பால் 2ஆம் கட்டமாக உலருணவு

மன்னார், டிசெ.21

மண் வாசனை அமைப்பின் ஊடாக மன்னார் மாவட்டத்தில் 2 ஆம் கட்டமாகத் தெரிவு செய்யப்பட்ட பெண் தலைமைத்துவ குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொதிகள் நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை வழங்கப்பட்டன.

அதிக பாதிப்புகளுக்கு உள்ளான 71 பெண் தலைமைத்துவ குடும்பங்கள் தெரிவு செய்யப்பட்டு முதல் கட்டமாக நேற்றுமுன்தினம் சனிக்கிழமை 30 குடும்பங்களுக்கு ஆயிரத்து 974 ரூபா பெறுமதியான உலர் உணவுப் பொதி கள் வழங்கப்பட்டன.

அதனைத் தொடர்ந்து இரண்டாம் கட்டமாக நேற்று ஞாயிற்றுக்கிழமை மேலும் 25 குடும்பங்களுக்கு ஆயிரத்து 974 ரூபா பெறுமதியான உலர் உணவுப் பொதிகள் வழங்கப்பட்டன. மண் வாசனை அமைப்பின் ஊடாக மன்னார் மாவட்ட இணைப்பாளர் அந்தோனி சகாயத்தால் இந்த உதவிகள் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது . (ச-56)

## மீன்பிடியில் ஈடுபட்ட இந்திய மீனவர்கள் கைது!!

கொழும்பு, டிசெ.21

இலங்கைக் கடல் எல்லைக்கு உட்பட்ட பகுதியில் மீன்பிடியில் ஈடுபட்ட ஒரு இந்திய மீன்பிடிப் படகுடன் 4 இந்திய மீனவர்கள் நேற்றுக் கைது செய்யப்பட்டனர்.

இலங்கைக் கடற்படை வடக்கு கடலில் மேற்கொண்ட சிறப்பு தேடுதலின் போதே இவர்கள் கைதுசெய்யப்பட்டனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்ட இந்திய மீனவர்களை 14 நாள்கள் தனிமைப்படுத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

இவர்கள் குறித்த மேலதிக விசாரணைகள் பொலிஸாரால் மேற்கொள்ளப்படுகின்றன.

கொவிட் 19 தொற்றுநோயால் இந்தச் சிறப்புத் தேடுதல் குறைக்கப்பட்டிருந்த நிலையில் கடந்த வாரம் முதல் கடற்படை மீண்டும் இந்த நடவடிக்கையை மேற்கொண்டது.

இதில் கடந்த 15 ஆம் திகதி ஐந்து இந்திய மீன்பிடிப் படகுகளுடன், 36 இந்திய மீனவர்களையும் கைது செய்தனர்.(ந-இ)

## ஜனாஸா எரிப்புக்கு எதிராக மழை நடுவே போராட்டம்

கல்முனை,டிசெ.21



ஜனாஸா எரிப்புக்கு எதிராக, வெள்ளை துணி கவனவீர்ப்புப் போராட்டம், கல்முனையில் கொட்டும் மழைக்கு மத்தியில் நேற்று முன்னெடுக்கப்பட்டது.

கல்முனை மாநகர சபை முன்னாள் உறுப்பினர் ஏ.எம். நியாஸின் ஏற்பாட்டில் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

போராட்டத்தில் ஜனாஸா எரிப்புக்கு எதிரான வாசகங்கள் மும்மொழிகளிலும் காட்சிப்படுத்தப்பட்டன.

"ஜனாஸாவை அடக்க அனுமதி தா, நல்லடக்கம் எங்கள் அடிப்படை உரிமை அதை மறுப்பது சர்வாதிகாரம், விஞ்ஞானத்தை ஏற்றுக் கொள் இனவாதத்தைக் கை விடு, இனவாதிகள் அல்ல நிபுணர்கள் சொல்வதைக் கேட்டு நட, இனவாதமாக இல்லாமல் விஞ்ஞான ரீதியாகச் செயற்படு" போன்ற வாசகங்கள் எழுதப்பட்ட பதாதைகளை போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் ஏந்தியிருந்தனர். (க-இ)

## வட்ஸப்பில் போலித் தகவல் பரிமாற்றிய ஒருவர் கைது!

கொழும்பு, டிசெ.21

இலங்கையில் சில தேவாலயங்கள் மீது தாக்குதல் நடத்தப்படவுள்ளது என்று வட்ஸப் ஊடாக போலித் தகவலைப் பரிமாற்றிய ஒருவர் நேற்று முன்தினம் கைதுசெய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதிப் பொலிஸ்மா அதி பர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

தனியார் நிறுவனமொன்றில் கணக்காய்வாளராக கடமையாற்றும் 31 வயதுடைய வெலிகம்பிட்டியப் பகுதியைச் சேர்ந்தவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கந்தானைப் பிரதேசத்தில் வைத்தே சந்தேகநபர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இவர், கந்தானைப் பிரதேசத்திலுள்ள பலருக்கு ஆங்கிலத்தில் அந்தத் தகவலைப் பகிர்ந்துள்ளார் எனவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார். (ந-இ)





சமாதானமும் சமூகப்பணியும் நிறுவனத்தின் நிதி உதவியில் நிந்தவூர் அல் மினா வித்தியாலயத்தில் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கு இன்று கொரோனா நோய்த்தடுப்பு உபகரணங்கள் வழங்கப்பட்டன. (ந-இ)

## தனிமையை நிறைவு செய்தால் வாய்ப்பு

கொழும்பு, டிசெ.22

வெளிநாடுகளில் இருந்து வருகை தந்து தனிமைப் படுத்தலை நிறைவு செய்த பயணிகளுக்கு 2021 ஆம் ஆண்டு 16 ஆம் திகதி வரையில் கட்டுநாயக்க விமான நிலையத்தில் தீர்வையற்ற கடைத் தொகுதிகளில் பொருள்களைக் கொள்வனவு செய்ய வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

2020 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 1 ஆம் திகதி முதல் 2020 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 16 ஆம் திகதிக்கு உட்பட்ட காலத்தில் தனிமைப்படுத்தலை நிறைவு செய்தவர்களுக்கு இந்த வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ப)

# மாலைதீவில் ஜனாஸா அடக்கம்; அரசின் முயற்சி தோல்வியில்

கொழும்பு, டிசெ.21

கொரோனா வைரஸால் உயிரிழந்த முஸ்லிம்களின் ஜனாஸாக்களை மாலைதீவில் அடக்கம் செய்யும் அரசாங்கத்தின் முயற்சி தோல்வியில் முடிவடைந்துள்ளது என "சண்டே ரைம்ஸ்" தெரிவித்துள்ளது

மேலும் தெரிவித்துள்ளதாவது.

ஜனாஸாக்களை மாலைதீவில் அடக்கம் செய்யும் அரசாங்கத்தின் முயற்சி தோல்வியில் முடிவடைந்துள்ளது. இரு நாடுகளும் எக் காரணங்களையும் தெரிவிக்காமல் இந்தத் திட்டத்தை கைவிட்டுள்ளன.

உடல்களை மாலைதீவில் அடக்கம் செய்யும் நடவடிக்கையால் பல அரசியல் சர்வதேச விளைவுகளை சந்திக்க வேண்டியிருக்கும் என்பதை இருநாடுகளும் உணர்ந்திருக்கலாம்.

இதற்கு அப்பால் மாலைதீவில் இதற்கு எதிர்ப்பு அதிகமாகக் காணப்பட்டது. இலங்கை அரசின் வேண்டுகோளால் ஏற்படக்கூடிய பல விளைவுகள் குறித்து ஆராய்ந்துள்ளோம் என மாலைதீவின் அரசாங்க வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

மாலைதீவு இன்னொரு நாட்டின் கொரோனா வைரஸால் உயிரிழந்தவர்களின் உடல்களை புதைப்பதற்கான இடுகாடு என அடையாளம் காணப்பட்டால் நாட்டின் சுற்றுலாத்துறைக்கு பாதிப்பு ஏற்படலாம் என அந்த நாட்டின் சுற்றுலாத்துறையினர் அச்சம் வெளியிட்டுள்ளனர் எனவும் தகவல்கள் வெளியாகியுள்ள என்றுள்ளது. (ந-இ)

# நீராடச் சென்றவர் சடலமாக மீட்பு

மட்டக்களப்பு, டிசெ.21

மட்டக்களப்பு - கரடியனாறு பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட மரப்பாலம் குளத்தில் நீராடச் சென்ற இளைஞர் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். மட்டக்களப்பு சுவிஸ் கிராமத்தில் இருந்து மரப்பாலத்திலுள்ள தனது உறவினர் வீட்டுக்கு சென்ற இளைஞர், நேற்று மாலை மரப்பாலம் குளத்தில் குளிக்கச்சென்ற வேளை நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார். அதே பகுதியைச் சேர்ந்த அன்ரன்ராஜ் விதுசன் (வயது 19) என்பவரே இவ்வாறு மீட்கப்பட்டுள்ளார். சடலம் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளது. சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கரடியனாறு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (வ-இ)

# கொரோனா உயிரிழப்பு ஜனவரியில் அதிகரிக்கும்

## அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் எச்சரிக்கை



கொழும்பு, டிசெ. 21

நாட்டில் கொரோனா வைரஸால் உயிரிழப்பவர்களின் எண்ணிக்கை ஜனவரி மாதத்தில் அதிகரிக்கும் என அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் எச்சரிக்கை விடுத்துள்ளது. மேலும் நோயாளர்களின் எண்ணிக்கையும் அதிகரிக்கும் எனவும், முதியோர் இல்லங்களில் வைரஸ் பரவுவதை தடுக்க அவற்றை உரியமுறையில் நிர்வகிக்க வேண்டும் எனவும் அந்தச் சங்கத்தின் மருத்துவர் ஹரித அலுத்கே தெரிவித்துள்ளார். (வ-இ)

# வெவ்வேறு மோதலில் இருவர் உயிரிழப்பு

கொழும்பு, டிசெ.21

தனிப்பட்ட தகராறு காரணமாக ஏற்பட்ட மோதலால் கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டு நபரொருவர் பொரளை, வனாதமுல்ல பிரதேசத்தில் நேற்றிரவு கொல்லப்பட்டுள்ளார். சம்பவம் தொடர்பில் சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ள நிலையில், பொரளை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இதேவேளை, அம்பாந்தோட்டை கொன்னோருவ பிரதேசத்தில் நேற்றிரவு இரு தரப்பினருக்கு இடையில் ஏற்பட்ட வாய்த்தர்க்கம் நீண்டதில் மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் 27 வயதுடைய இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளான். சம்பவம் தொடர்பில் 4 சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். (வ-இ)

# விதிமுறை மீறல்: 1652 பேர் இதுவரை கைது

கொழும்பு, டிசெ. 21

கொரோனாவின் மூன்றாவது அலைப் பரவல் ஆரம்பமாகியதையடுத்து கடந்த ஒக்ரோபர் 30ஆம் திகதியிலிருந்து முகக்கவசம் அணியத் தவறிய மற்றும் சமூக இடைவெளியைப் பின்பற்றத் தவறிய குற்றச்சாட்டில் இதுவரை ஆயிரத்து 652 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

இதேவேளை கடந்த 24 மணித்தியாலங்களில் தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறிய குற்றச்சாட்டில் 41 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். (வ-இ)

# பண்டிகை காலத்தில் மதுபானசாலைகளை மூடுமாறு கோரிக்கை

கொழும்பு, டிசெ.21

நத்தார் மற்றும் புதுவருட பண்டிகைக் காலத்தில் சகல மதுபானசாலைகளையும் மூடுமாறு அரச மருத்து அதிகாரிகள் சங்கம் அரசிடம் கோரிக்கை விடுத்துள்ளது. இது தொடர்பில் சங்கத்தின் தலைவர் மருத்துவர் ஹரித அளுத்கே தெரி வித்துள்ளதாவது,

மது அருந்திவிட்டு பொறுப்பற்ற விதத்தில் ஆங்காங்கே சுற்றித்திரியும் நபர்களாலும் கொரோனா பரவும் அபாயம் உள்ளதால் பண்டிகைக் காலங்களில் நாட்டிலுள்ள சகல மதுபான சாலைகளையும் வேண்டும்.

கொழும்பு மாவட்டத்தில் தொற்றாளர்களின் எண்ணிக்கை 65 தொடக்கம் 70 சதவீதமாகக் காணப்படும் அதே வேளை, மதுபானசாலைகளை தொடர்ச்சியாக திறந்து வைப்பதால், 2021ஆம் ஆண்டு, தொற்றாளர்களின் எண்ணிக்கை 80 சதவீதமாக அதிகரிக்க வாய்ப்புள்ளது எனவும் தெரிவித்துள்ளார். (வ-இ)

# மழைக்கு சாத்தியம்

கொழும்பு, டிசெ. 21

வடக்கு, கிழக்கு, வடமத்திய மற்றும் ஊவா மாகாணங்களிலும் அம்பாந்தோட்டை மாவட்டத்திலும் அவ்வப்போது மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக் கூடிய சாத்தியம் உள்ளது என வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

திணைக்களம் வெளியிட்டுள்ள அறிவிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

சப்ரகமுவ மாகாணத்திலும் களுத்துறை, காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும் பல இடங்களில் பிற்பகல் நேரங்களில் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக் கூடிய சாத்தியம் உள்ளது. மத்திய மாகாணத்திலும் பதுளை, அம்பாறை மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களிலும் சில இடங்களில் 100 மி.மீக்கும் அதிகமான ஓரளவு பலத்த மழை வீழ்ச்சி எதிர்பார்க்கப்படுகின்றது.

மத்திய மலைநாட்டின் கிழக்கு சரிவுப் பகுதிகளிலும் வடக்கு, வடமத்திய மற்றும் வடமேல் மாகாணங்களிலும் அம்பாந்தோட்டை மாவட்டத்திலும் அவ்வப்போது மணித்தியாலத்துக்கு 50 கிலோ மீற்றர் வரை அதிகரித்த வேகத்தில் ஓரளவு பலத்த காற்று வீசக் கூடிய சாத்தியம் உள்ளது. தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளுமாறு பொதுமக்களுக்கு திணைக்களம் அறிவுறுத்தியுள்ளது. (வ-இ)

# பண்டிகையில் சுற்றுலாவுக்கு கட்டுப்பாடு!

கொழும்பு, டிசெ.21

பண்டிகைக் காலத்தில் நுவரெலியாவுக்குச் சுற்றுலா செல்ல எதிர்பார்த்துள்ளவர்களுக்கு புதிய அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது.

அவர்கள் தாம் கொரோனா அவதானமிக்க பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் இல்லை என்பதை உறுதிப்படுத்த வேண்டும்.

இதற்காக அவர்கள் பொதுச் சுகாதார பரிசோதகர்களிடம் சான்றிதழ் ஒன்றைப் பெறுவது கட்டாயம் என்றும் அவர்கள் தங்கும் இடங்களில் சான்றிதழைக் கையளிக்க வேண்டும் என்றும் நுவரெலியா மாவட்டச் செயலாளர் அறிவித்துள்ளார்.(ற-இ)

# என்ன சொல்கிறது டைட்டானிக்



டைட்டானிக் மூழ்காமல் இருந்திருந்தால் இன்றைக்கு உலக அளவில் கடல்சார் சுற்றுலாவானது இன்னோர் பரிமாணத்தை எட்டியிருக்கக் கூடுமோ என எண்ணத் தோன்றுகிறது.அந்த அளவுக்கு மனித இனம் தவறவிட்ட ஒரு பொக்கிஷமாக இது உள்ளது.

■ பளையூர் பாலாஜினி

இப்போது இயற்கையை நோக்கி திரும்பிக் கொண்டிருக்கிறது டைட்டானிக் கப்பல்" ஆம். வலுவான கடல் நீரோட்டம், உப்பு அரிப்பு மற்றும் உலோகத்தை உண்ணும் பக்றீரியாக்களின் காரணமாக டைட்டானிக் கப்பல் சிதைவடைந்து வருகிறது என அண்மைய ஆய்வுகளினூடாக அறிந்து கொள்ள முடிகின்றது.

டைட்டானிக் கப்பலை தெரியாதவர்கள் யாருமே இருக்க முடியாது. அந்த அளவுக்கு உலக அளவில் பிரசித்தம் வாய்ந்த ஒன்றாகவும் பேசப்படும் விடயமொன்றாகவும் இக்கப்பலும் அதன் அழிவும் காணப்படுகின்றது. உலக அளவில் இரண்டாம் உலக யுத்தத்தின் பின்னரான காலப்பகுதியில் தான் கடல் சார் அகழ்வாய்வுகளின் வளர்ச்சியானது வேகமடைந்தது என குறிப்பிடலாம்.


இரண்டாம் உலகபோரின் போது சிதைவடைந்து கடலிலே மூழ்கி இருந்த கப்பல்களையும் அவற்றினுள் மறைந்திருந்த பொருள்களையும் கண்டுபிடிக்க வேண்டும் என்ற முனைப்பே தொல்லியலாளர்களை கடல் நோக்கி இழுத்து வந்துள்ளது. இன்று வளர்ச்சியடைந்த நாடுகள் வளர்ந்து வருகின்ற நாடுகள் என்ற வேறுபாடு ஏதுமின்றி அனைத்து நாடுகளுமே கடல்சார் தொல்லியலில் Maritime archeology ஆர்வம் காட்டி வருகின்றன.

அவ் ஆர்வத்துக்கு தூண்டுதலாகவும் அடையாளமாகவும் விளங்குவது டைட்டானிக் கப்பல் தான். கடற்போக்குவரத்தில் அமெரிக்கா பிரித்தானியா முதலிய நாடுகள் போட்டித்தன்மையுடன் ஈடுபட்ட வேளையில் தான் கூர்நாத் நிறுவனமானது அமெரிக்க அரசாங்கத்திடமிருந்து பெற்றுக் கொண்ட நிதியுதவியுடன் தயாரிக்கப்பட்டது தான் டைட்டானிக்.உலக அளவில் மிகப்பெரியதாக கட்டப்பட்ட இக்கப்பலானது "மூழ்கடிக்கப்படாத கப்பல்" என்ற விளம்பரத்துடனே தனது பயணத்தை ஆரம்பித்தது.

882 அடி நீளம் 92.2 அடி அகலம் 59.5அடி உயரமும் கொண்ட இந்த கப்பலில் சுமார் 46ஆயிரத்து 329டன் நிறையுள்ள பொருள்களை ஏற்ற கூடியதாக இருந்தது. கப்பலில் 16அறைகள் இருந்ததுடன் நீர் புகாத வண்ணம் அவை அமைக்கப்பட்டிருந்தன.ஓர் அறைக்குள் நீர் புகுமாயின் அவ் றையின் கதவு தானாகவே மூடி கொள்ளும் தொழில்நுட்பத்துடன் அமைக்கப்பட்டது. மாதங்கள் கப்பலில் தங்கியிருக்கக் கூடிய வகையிலான உணவு சேமிப்பு, சிற்றுண்டி சாலைகள், மைதானங்கள், நூலகங்கள், உணவு உண்ணும் வகையிலான உலகத்தரம் வாய்ந்த பீங்கான்கள் என அனைத்து உயர்தர வசதிகளையும் தன்னகத்தே கொண்டிருந்த இவ் டைட்டானிக் கப்பலானது இப்படியோர் அழிவை எதிர்கொள்ளும் என யாருமே நினைத்திருக்க வாய்ப்பில்லை தான்.

1909ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இக்கப்பல் கட்டுமானமானது 1911இல் நிறைவடைந்த விடத்து 1912 ஏப்ரல் 10ஆம்புதன்கிழமை இங்கிலாந்தின் சைதாம்டன் துறைமுகத்தில் இருந்து அமெரிக்காவின் நியூயோர்க் நோக்கி தனது பயணத்தை ஆரம்பித்தது.

புறப்படும்போது கப்பலில் உந்திகளின் தாக்கம் காரணமாக அருகிலிருந்த நியூயோர்க் என்ற கப்பலை நகர்த்தி தன்னருகே கொண்டு வந்ததனால் ஒரு மணிநேரம் தாமதமாகியே புறப்பட்டுள்ளது. சவுத்தாமடன் துறைமுகத்தில் இருந்து புறப்பட்டு பிரான்ஸில் பயணிகளை ஏற்றிக் கொண்டு குயின்ஸ்டன் துறைமுகத்தூடாக 2ஆயிரத்து 240பயணிகளுடன் பயணித்தது.ஏப்ரல் 14 மதியம் 1.45 அளவில் 'நௌது அமெரிக்கா' எனும் கப்பலில் இருநௌது டைட்டானிக் கப்பல் செல்லும் வழியில் பனிப்பாறைகள் உள்ளன என செய்தி அனுப்பியும் தகவல் சென்றடையவில்லை.கப்பலில் இருந்த 20 உயிர்காப்பு படகுகளும் ஒன்றன் பின் ஒன்றாக தரையிறக்கப்பட்டன. ஏப்ரல் 15 மதியம் 2.20 அளவில் கப்பல் முற்றாக கடலில் மூழ்கியது. கடைசியாக கப்பலில் இருந்த 2ஆயிரத்து 233 பேரில் 706 பேர் காப்பாற்றப்பட்டனர்.





டைட்டானிக் மூழ்காமல் இருந்திருந்தால் இன்றைக்கு உலக அளவில் கடல்சார் சுற்றுலாவானது இன்னோர் பரிமாணத்தை எட்டியிருக்கக் கூடுமோ என எண்ணத் தோன்றுகிறது. அந்த அளவிற்கு மனித இனம் தவறவிட்ட ஒரு பொக்கிஷமாக இது உள்ளது. 1985 செப்ரெம்பர் மாதம் 1ம் திகதி மூழ்கிய கப்பலின் சில பாகங்கள் கண்டுபிடிக்கப்பட்டதைத் தொடர்ந்து இது தொடர்பான ஆய்வுகள் முடுக்கிவிடப்பட்டன.

1987 அளவில் மூழ்கிய கப்பலில் இருந்து ஆயிரத்து 800 கலைப்பொருட்கள் சேகரிக்கப்பட்டன. 1995 அளவில் ஜேம்ஸ் கமரூன் கப்பலை பார்வையிடச் சென்றதுடன் அப்போது எடுத்த படங்களைத் தனது டைட்டானிக் திரைப்படத்திலும் பயன்படுத்தி உள்ளார்.1998 முதலாவது சுற்றுலா வாசிகள் அங்கு பயணம் செய்தனர். 2012ல் யுனெஸ்கோவால் அது பாதுகாக்கப்பட்டு உலகமரபுரிமை ஆக்கப்பட்டது.

குறிப்பிடத்தக்க விடயமென்னவெனில் உறைய வைக்கும் சூழ்நிலைகளில் கும்மிருட்டான நீரில் தீவிர அமுக்கத்திலும் கப்பலில் உயிரினங்கள் வாழ்கின்றன என்பது தான்.அறிஞர்கள் மற்றும் விஞ்ஞானிகள் கருத்துப்படி டைட்டானிக் கப்பல் சிறிது சிறிதாக அழிவடைந்து கொண்டு வருகின்றது என்கிறார்கள். கடல் ஆய்வு வரலாற்றை முழுமையாக ஆய்வு செய்வோமேயானால் அதில் டைட்டானிக் கப்பலுக்கும் முக்கிய பங்குண்டு. கடல் தன் மடியில் அதிக செல்வங்களை எல்லாம் ஒளித்து வைத்திருக்கின்றது என்ற அறிஞரின் கருத்துக்கு இதுவே சான்று. இனியொரு டைட்டானிக் மூழ்காமல் காக்க வேண்டியது நம் ஒவ்வொருவரினதும் கடமையன்றோ.







## கொரோனாவுக்கு தடுப்பூசியை ஏற்றிய தாதி நேரலையில் மயங்கினார்!

நியூயோர்க், டிசெ.21

அமெரிக்காவில் தடுப்பூசி பெற்றுக்கொண்ட தாதியொருவர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்துக் கொண்டிருக்கும் போது நேரலையில் மயங்கி வீழ்ந்ததை அடுத்து குறித்த தடுப்பூசிக்குக் கடும் எதிர்ப்பு வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

அமெரிக்காவில் முதலாவதாக கொரோனா தடுப்பூசி போட்டுக்கொண்டவர் தலைமைத் தாதி டிபானி பாண்டிஸ். இவர் நேற்றுமுன்தினம் கொரோனா தடுப்பூசி போட்டுக்கொண்டவுடன், அது தொடர்பில் ஊடகங்களுக்கு நேர்காணல் வழங்கிக் கொண்டிருந்தார். அப்போது சிலநிமிடங்களில் அவர் மயங்கிச் சரிந்துவிட்டார். இந்த நேரலை உலகமெங்கும் செய்தி ஊடகங்களில் 'வைரல்' ஆகிவிட்டது.

இதையடுத்து தடுப்பூசிக்கு எதிர்ப்பு வெளியிட்டு வருவோர், கொரோனா தடுப்பூசி பாதுகாப்பானது இல்லை என்பதற்கு இந்தச் சான்றே போதும்; உடனடியாக அதைத் தடை செய்யுங்கள் என்று வலியுறுத்தியுள்ளனர். (ம-வஇ)

### இந்தியாவுடன் எதிர்ப்புப் போக்கு

# கட்சிக்குள் வலுத்த மோதலால் கலைக்கப்பட்ட நாடாளுமன்றம்

### நேபாளத்தின் நிலை இது

காத்மண்டு, டிசெ. 21

நேபாளத்தில் ஆளுங்கட்சியான நேபாள கம்யூனிஸ்ட் கட்சிக்குள் வலுத்த அதிகார மோதலையடுத்து அந்த நாட்டு நாடாளுமன்றம் கலைக்கப்பட்டுள்ளது.



சில மாதங்களுக்கு முன்னர் இந்தியாவின் எல்லைப் பகுதியை இணைத்து நேபாள அரசு புதிய வரைபடம் ஒன்றை வெளியிட்டது. இதைத் தொடர்ந்து இந்தியாவுடன் மோதல் போக்கையும் சீனாவுடன் நெருக்கமான உறவையும் அந்நாட்டுப் பிரதமர் சர்மா ஒலி கடைப்பிடித்தார். இதற்குக் கட்சிக்குள் பலத்த எதிர்ப்பு கிளம்பியது. இந்த நிலையில், கடந்த சனிக்கிழமை கட்சியில் உள்ள தமது ஆதரவு தலைவர்கள் மற்றும் அமைச்சர்களுடன் சர்மா ஒலி ஆலோசனை நடத்திவிட்டு நாடாளுமன்றத்தைக் கலைப்பதற்காக ஒப்புதலைப் பெற்றுக் கொண்டார்.

இந்தத் தீர்மானம் ஜனாதிபதி பித்யா தேவி பண்டாரிக்கு அனுப்பிவைக்கப்பட்டது. இந்தப் பரிந்துரையை ஏற்றுக்கொண்ட ஜனாதிபதி நாடாளுமன்றத்தைக் கலைக்க உத்தரவிட்டதுடன், அடுத்த ஆண்டு ஏப்ரல் 30, மே 10ஆம் திகதிகளில் இருகட்டங்களாக பொதுத் தேர்தல் நடைபெறும் எனவும் அறிவித்துள்ளார். (ம-வஇ)




# 400 மில்லியன் டொலரை கடன்பெறுகிறது இந்தியா

புதுடில்லி, டிசெ. 21

கொரோனாவால் பாதிக்கப்பட்ட வறிய மக்களைப் பாதுகாக்கும் வகையில் 400 மில்லியன் அமெரிக்க டொலர் வழங்கும் ஒப்பந்தத்தில் இந்தியாவும் உலக வங்கியும் கையெழுத்திட்டுள்ளன.

கடந்த மே மாதத்தில் 750 மில்லியன் டொலர்களுக்கான செயல்பாடுகள் அங்கீகரிக்கப்பட்டதால் தற்போது 2ஆம் கட்டமாக இந்தத் தொகை வழங்கப்பட உள்ளது எனத் தகவல்கள் வெளியாகி உள்ளன. கொரோனா பெருந்தொற்று ஏற்படுத்திய அதிர்ச்சியில் இருந்து வறிய மக்களை மற்றும் பாதிக்கப்படக்கூடியவர்களுக்கு போதுமான சமூக பாதுகாப்பை வழங்கல் மற்றும் இந்தியாவில் மாநில மற்றும் தேசிய அரசுகளுக்கு அதற்கான திறனை இந்தத் திட்டம் வழங்கும் என்று இந்திய நிதித்துறை அதிகாரிகள் தெரிவித்தனர். இதற்கான ஒப்பந்தத்தில் இந்தியா சார்பாக டொக்டர் மொஹாபத்ராவும், உலக வங்கி சார்பாக இந்தியாவின் செயல் இயக்குநர் சுமிலா குல்யானியும் கையெழுத்திட்டனர். (ம-வஇ)

## மாஸ்க் அணிய தவறிய ஜனாதிபதிக்கு அபராதம்

### சிலி நாட்டில் அதிரடி

சான்தியாகோ, டிசெ. 21

முகக்கவசம் இன்றி பொதுவெளியில் நடமாடிய சிலி நாட்டு ஜனாதிபதி செபஸ்டியன் பெனெராவுக்கு அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

செபஸ்டியன் பெனெரா தனது சொந்த ஊரான கச்சாகுவா நகரில் உள்ள கடற்கரைக்கு சென்றபோது, அங்கிருந்த ஒரு பெண்ணின் விருப்பத்துக்காக அவருடன் செல்பி எடுத்துக் கொண்டார். அதன்போது பெனெரா முகக்கவசம் அணிந்திருக்கவில்லை. இந்த படம் சமூக வலைத்தளங்களில் வைரலாகி சர்ச்சைக்குள்ளானது.

இதையடுத்து சிலி அரசு, ஜனாதிபதி செபாஸ்டியன் பெனெராவுக்கு 3 ஆயிரத்து 500 அமெரிக்க டொலர் அபராதம் விதித்துள்ளது. இதனை ஏற்றுக் கொண்ட பெனெரா தனது செயலுக்காக மன்னிப்பும் கோரியுள்ளார். (மவஇ)

# தடுப்பூசிக்கு ஏற்ப தன்னை உருமாற்றியது கொரோனா

### மீண்டும் முடக்கிய பிரிட்டன்

லண்டன், டிசெ. 21

பிரிட்டனில் கொரோனா தடுப்பூசி வழங்கப்பட்டுவரும் நிலையில், புதிய வகை கொரோனா வைரஸ் பரவத் தொடங்கியுள்ளது என்ற தகவல் வெளியாகி உள்ளது. இதனால் அங்கு மீண்டும் ஊரடங்கு நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

உலகில் கொரோனாப் தொற்றுப் பாதிப்பு படிப்படியாக குறையத் தொடங்கியுள்ளது. பிரிட்டன், அமெரிக்கா உள்ளிட்ட நாடுகளில் கொரோனா தடுப்பூசி மக்கள் பயன்பாட்டுக்கு கொண்டு வரப்பட்டுள்ளன. இந்நிலையில், இங்கிலாந்தில் கடந்த சில நாள்களாக கொரோனா பாதிப்பு திடீரென அதிகரித்துள்ளது. இதற்கு காரணம், உருமாற்றத்துடன் கூடிய புதியவகை கொரோனா வைரஸ் பரவுவதே என்பது கண்டறியப்பட்டுள்ளது. நிலைமை தற்போது கைமீறி போய்விட்டது என அந்த நாட்டின் சுகாதார அமைச்சர் நேற்றுத் தெரிவித்திருந்தார். இதற்கிடையே, லண்டன், தென்கிழக்கு, கிழக்கு இங்கிலாந்து பகுதிகளில் மீண்டும் ஊடரங்கை பிரதமர் போரிஸ் ஜோன்சன் நேற்று அறிவித்தார். அத்தியாவசியப் பணிகளுக்காக மட்டுமே மக்கள் வெளியே வரவேண்டும் என்று அவர் கேட்டுக்கொண்டுள்ளார். (ம-வஇ)





# ஐ.சி.சி டெஸ்ட் தரவரிசை; 2 ஆவதாக நீடிக்கும் கோலி

புதுடில்லி, டிசெ.21

ஐ.சி.சி டெஸ்ட் தரவரிசையில் இந்திய அணித் தலைவர் கோலி 2 ஆவது இடத்தில் நீடிக்கின்றார்.

அடிலெய்டில் நடைபெற்ற முதல் டெஸ்டில் கோலி முதல் இன்னிங்ஸில் 74 ஓட்டங்கள் அடித்தார். 2 ஆவது இனிங்ஸில் 4 ஓட்டங்களில் ஏமாற்றமடைந்தார். ஆஸ்திரேலியா துடுப்பாட்டவீரர் ஸ்டீவ் ஸ்மித் முதல் இன்னிங்ஸில் 1 ஓட்டமும், 2 ஆவது இன்னிங்ஸில் ஆட்டமிழக்காமல் 1 ஓட்டமும் எடுத்தார்.

ஐ.சி.சி டெஸ்ட் தரவரிசைக்கான புள்ளிகளில் ஸ்மித் 10 புள்ளிகளை இழந்த நிலையில், கோலி இரண்டு புள்ளிகள் அதிகம் பெற்றார்.

இதனால் ஸ்மித் 911 புள்ளிகளுடன் முதல் இடத்தில் உள்ளார். கோலி 888 புள்ளிகளுடன் 2 ஆவது இடத்தில் உள்ளார். (ற-இ)




# 2 ஆவது ரி20 தொடரையும் கைப்பற்றியது நியூசிலாந்து

வெலிங்டன், டிசெ.21

நியூசிலாந்து பாகிஸ்தான் அணிகளுக்கு இடையிலான 2 ஆவது ரி20 கிரிக்கெட் தொடரை நியூசிலாந்து 9 இலக்குகள் வித்தியாசத்தில் கைப்பற்றியது. இந்த 2 ஆவது ரி20 கிரிக்கெட் போட்டி ஹாமில்டனில் நடைபெற்றது.

நாணயச்சுழற்சியில் வென்ற பாகிஸ்தான் துடுப்பாட்டத்தைத் தெரிவு செய்தது. இதில் அனுபவ வீரரான முகமது ஹபீஸ் ஆட்டமிழக்காமல் 10 நான்கு ஓட்டங்கள், 5 ஆறு ஓட்டங்களுடன் 99 ஓட்டங்கள் விளாசினார். இவர் மட்டுமே சிறப்பாக விளையாடியதால் பாகிஸ்தான் 20 பந்துப் பரிமாற்றங்களில் 6 இலக்குகள் இழப்புக்கு 163 ஓட்டங்கள் எடுத்தது.

நியூசிலாந்து அணி தரப்பில் டிம் சவுத்தி 4 பந்துப் பரிமாற்றங்களில் 21 ஓட்டங்கள் மட்டுமே விட்டுக்கொடுத்து 4 இலக்குகள் வீழ்த்தினார்.

பின்னர் 164 ஓட்டங்கள் பெற்றால் வெற்றி என்ற இலக்குடன் நியூசிலாந்து களமிறங்கியது. தொடக்க வீரர் மாரட்டின் கப்தில் 21 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். அடுத்து டிம் செய்பெர்ட் உடன் அணித்தலைவர் கேன் வில்லியம்சன் ஜோடி சேர்ந்தார். இந்த ஜோடி இலக்குகள் இழக்காமல் 19.2 பந்து பரிமாற்றங்களில் 164 ஓட்டங்கள் எடுத்து நியூசிலாந்து அணியை 9 இலக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெறச் செய்தது.

செய்பெர்ட் 63 பந்துகளில் 84 ஓட்டங்களும், கேன் வில்லியம்சன் 42 பந்துகளில் 57 ஓட்டங்களும் விளாசினர். 3 ஆவது மற்றும் கடைசி போட்டி நாளை நேப்பியரில் நடைபெறவுள்ளது.(றஇ)

# ஸ்டிரைக்கர்ஸை வீழ்த்தி சிட்னி சிக்சர்ஸ் வெற்றி!

கான்பேரா, டிசெ.21

பிக் பாஷ் லீக் ரி20 கிரிக்கெட் தொடரில் நேற்று நடந்த 11 ஆவது லீக் ஆட்டத்தில் சிட்னி சிக்சர்ஸ் அணி 38 ஓட்டங்களில் வெற்றி பெற்றது. இந்த ஆட்டத்தில் சிட்னி சிக்சர்ஸ் அடிலெய்டு ஸ்டிரைக்கர்ஸ் அணிகள் மோதின.

அடிலெய்டு ஸ்டிரைக்கர்ஸ் அணிக்கெதிராக சிட்னி சிக்சர்ஸ் அணியின் டேனியல் கிறிஸ்டியன் 16 பந்தில் அரை சதம் விளாச, சிட்னி சிக்சர்ஸ் 38 ஓட்டங்களில் வெற்றி பெற்றது.

சிட்னி சிக்சர்ஸ் முதலில் துடுப்பாட்டம் செய்தது. டேனியர் ஹியூக்ஸ் 41 பந்துகளில் 46 ஓட்டங்களும், டேனியல் கிறிஸ்டியன் 16 பந்துகளில் 50 ஓட்டங்களும் விளாச, சிட்னி சிக்ஸ் 20 பந்துப் பரிமாற்றங்களில் 5 இலக்குகள் இழப்புக்கு 177 ஓட்டங்கள் குவித்தது.

பின்னர் 178 ஓட்டங்கள் அடித்தால் வெற்றி என்ற இலக்குடன் அடிலெய்டு ஸ்டிரைக்கர்ஸ் அணி களம் இறங்கியது. அந்த அணியால் 139 ஓட்டங்கள் மட்டுமே அடிக்க முடிந்தது. இதனால் சிட்னி சிக்சர்ஸ் 38 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

டேனியல் கிறிஸ்டியன் 4 பந்துகளில் 25 ஓட்டங்கள் விட்டுக்கொடுத்து 1 இலக்கு வீழ்த்தினார். அத்துடன் ஆட்ட நாயகன் விருதையும் வென்றார். (ற-இ)




# இந்தியஅணியை கலாய்த்த அக்தர்!

புதுடில்லி, டிசெ.21



இந்திய அணியின் துடுப்பாட்டத்தை, பாகிஸ்தான் அணியின் முன்னாள் வேகப்பந்து வீச்சாளர் அக்தர் கிண்டல் செய்துள்ளார்.

இந்திய கிரிக்கெட் அணி ஆஸ்திரேலியாவுடனான முதல் டெஸ்ட் போட்டியில் 8 இலக்குகள் வித்தியாசத்தில் தோல்வியை தழுவியுள்ளது. இரண்டாவது சுற்றில் வெறும் 36 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தது. இந்த நிலையில் இந்திய அணியின் துடுப்பாட்டத்தை ஷோயப் அக்தர் கிண்டல் செய்துள்ளார்.

இந்திய அணி குறித்து அக்தர் தெரிவித்ததாவது,

நேற்றுமுன்தினம் காலை தூங்கி எழுந்தவுடன் தொலைக்காட்சியைப் பார்த்தேன். இரண்டாம் நாள் ஆட்டத்தை நான் பார்க்கவில்லை.

ஸ்கோர் விவரத்தைப் பார்த்தவுடன் இந்தியா 369 ஓட்டங்களை இலக்காக நிர்ணயித்துள்ளது என நினைத்தேன்.

அதனால் எனது கண்களை துடைத்துக் கொண்டு ஸ்கோர் விவரத்தை உற்றுப் பார்த்தேன். அதில் 36 இற்கு பக்கத்தில் '/' குறி இருப்பதை கவனித்தேன். இதைப் பார்த்த போது இந்தியாவோடு ஒப்பிடும்போது பாகிஸ்தானே மேல்தான் எனத் தோன்றுகிறது என்றார். (ற-இ)

# தங்கம் வென்றார் அமித் பங்ஹால்

புதுடில்லி, டிசெ.21

உலகக் கிண்ணக் குத்துச்சண்டைப் போட்டியில் இந்திய வீரர் அமித் பன்ஹால் தங்கப் பதக்கத்தைத் தட்டிச் சென்றார்.

உலகக் கிண்ணக் குத்துச்சண்டைப் போட்டி ஜேர்மனியில் நடைபெற்றது. இதில் ஆண்களுக்கான 52 கிலோ பிரிவில் இறுதிப்போட்டிக்கு முன்னேறி இருந்த இந்திய வீரர் அமித் பன்ஹாலை எதிர்த்து களம் இறங்க இருந்த ஜேர்மனி வீரர் அர்ஜிஷ்டி டெர்டெர்யன் கடைசி நேரத்தில் விலகியதால் போட்டியின்றி அமித் பன்ஹால் தங்கப் பதக்கத்தைத் தட்டிச் சென்றார். (ற-இ)

